[திரு. கா. காளிமுத்து] [1977 ஆகஸ்ட் 8

தங்களைக் கேட்டுக் கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் இது தொடர்பாக தங்களது சீரிய கருத்துக்களை வழங்கிய தற்குப் பிறகு அதுபற்றி பதிலுரை வழங்குவதற்கு ஏதுவாக இருக்கும் என்ற காரணத்தால் மாண்புமிகு உறுப்பினர்கள் இதுபற்றி தங்களது எண்ணங்களை வழங்கிட வேண்டிக் கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் அவைமுன் விவாதத்திற்கு வைக்கப் படுகின்றன.

திரு. து. இராசரத்தினம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . .

திரு. ரெ. வீ. சவுந்திரராஜன்: தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தவரையில் நாங்கள் 27 பேர்கள் இருக் கிறோம். ஆனால் வெட்டுத் தீர்மானத்தை ஆதரித்துப் பேசுவது திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்களுக்குத்தான் அந்தச் சந்தர்ப்பம் கொடுக்கப்பட்டு வருகிறது. எனவே காங்கிரஸ் கட்சிக்கு இதை முதன்முதலாக அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அங்கீகரிக்கப்பட்ட எதிர்க் கட்சியாக திராவிட முன்னேற்றக் கழகம் இருப்பதால், சம்பிர தாயப்படியும் முறைப்படியும் அவர்கள்தான் துவக்கி வைக்க வேண்டும். ஆகவேதான் அந்தச் சந்தர்ப்பத்தைத் தருகிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை.

(7) **ஒழுங்குப் பிரச்சினை.**

நகராட்சி நிர்வாகம் குறித்த வெட்டுத் தீர்மானங்கள் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் முதலியன பற்றிய மானியத்தின் கீழ் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப்: ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார். மூனிசிப்பல் அட்மினிஸ்ட்ரேஷன் என்ற தலைப்பில் தனியாக ஒரு மானியக் கோரிக்கையை வைத்து இந்த அவையில்

---

* 134–168-ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

நிறைவேற்றுவது வழக்கமாக இருந்தது. இந்த முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் மானியக் கோரிக்கை எதிலும் இணைக்கப் பட்டதாக விவரம் சொல்லப்படவில்லை. இந்தச் சமுதாய நல வளர்ச்சித் திட்டங்கள் கோரிக்கையோடு இந்த முனிசிபல் அட்மினிஸ்ட்ரேஷன் இணைக்கப்பட்டிருக்கிறதா? அப்படியிருந் தால் அதற்கான குறிப்பு வரவில்லை. அதுபற்றிய விவரங்களும் இல்லை. ஆனால் நகராட்சிபற்றி இங்கே அனுமதிக்கப் பட்டிருக்கிறது. குறிப்பு இல்லாமல் நகராட்சிகள் பற்றி எப்படிப் பேசுவது என்பதற்கு தாங்கள் விளக்கம் தரவேண்டும். இந்த மாதிரி நிலைமை இருக்குமானால் உறுப்பினர்கள் தங்களது கடமையைச் செய்ய முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அலுவல் ஆய்வுக் குழுவில் இதுபற்றி நாம் விவாதித்து முனிசிப்பல் அட்மினிஸ்ட்ரேஷனைத் தனியாக வைத்து விவாதிக்க வேண்டும் என்று ஹெட் ஆப் ஸ்டேட்-ல் இணைத்திருக்கிறோம். அலுவல் ஆய்வுக் குழுவில் பேசும்போது நகராட்சி நிர்வாகம் ஊராட்சிகளோடு இருக்கத் தேவை இல்லை, தனியாகப் பிரித்து ஹெட் ஆப் ஸ்டேட் என்ற தலைப்பில் வருகிற கோரிக்கையோடு இணைத்துச் சேர்த்து வைத்திருக்கிறோம். அதிலே வருகிறது.

திரு. எம். ஏ. லத்தீப்: அப்படி எடுத்துக் கொள்வதாக இருந்தால் இந்த வெட்டுத் தீர்மானம் இப்போது அனுமதிக்கப் பட்டிருப்பது தேவையில்லை—ஒன்றுக்கு ஒன்று முரண்பாடு இருக்கிறது—அதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகி றேன்.

(6) 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும்-வாக்கெடுப்பும்—தொடர்ச்சி.

திரு. து. இராசரத்தினம்: தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்கூடக் கட்டடங்களை அரசே கட்டித்தர வேண்டும், ஒன்றியச் சாலைகளை அரசே ஏற்று அமைத்துத் தர வேண்டும் என்று வெட்டுத் தீர்மானத்தை உங்கள் முன்னால் வைத்து அதில் குறிப்பாக இன்றையதினம் ஒன்றியங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற நிதி போதுமானதாக இருக்கிறதா